**பொல்பிதிகம பிரதேச சபை - 2022**

**-----------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொல்பிதிகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து பொலபிதிகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள்,

புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர்களை கணக்கீடு செய்யும் போது உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 2,027,219 பெறுமதியான 05 நிர்மாண வேலைகள் கடன்கொடுத்தோருக்கு செலவு வைக்கப்பட்டு மூலதனச் சொத்துக்களை திருத்தம் செய்யும் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஆ) | கிராமிய வீதிகள் எஞ்சிய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் கீழ் 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 24 செயற்திட்டங்களுக்கான | அடுத்துவரும் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் ரூபா 34,428,751 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க ரூபா 35,077,148 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டில் வேலை முடிவுறுத்தப்பட்டிருந்த ரூபா 2,182,174 பெறுமதியான 03 செயற்திட்டங்களும் ரூபா 600,000 பெறுமதியான காணியும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 24,343 பெறுமதியான இருப்பு கணக்குகளில் தவிர்க்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | தீயினால் அழிவுற்ற வீட்டினை திருத்தம் செய்வதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 100,000 மீண்டும் பொது வழங்கல் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பிழையாக அந்த மீதி கடன்கொடுத்தோர் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| வழங்கப்படாத கணக்காய்வு சான்று | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 106,143,802 பெறுமதியான 02 கணக்கு மீதிகள் நாளதுவரையாக்கிய கட்டுப்பாட்டுக் கணக்கு இல்லாமை மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல் ஆவணங்கள் சமர்ப்பிக்காமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | அடுத்துவரும் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | போதியளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதியும் நிருவாகமும்) சட்டவிதி 61 | நிர்மாண வேலை வரி மற்றும் வியாபார வரி சம்பந்தமாக வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் முறைப்படியாக வியாபாரங்களை மீளாய்வு செய்து பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி 371 | முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்கு 37 நாட்களிலிருந்து 91 நாட்கள் வரையான காலதாமதம் எடுக்கப்பட்டிருந்தது. | முற்பணங்கள் பெற்றுக்கொண்ட செயற்பாடுகள் பூர்த்தியடைந்த உடன் முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்பாடு பூர்த்தியடைந்த உடன் முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.8 அதிகாரம் இல்லாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 677.97 மில்லியன் பெறுமதியான 87 நாட்குறிப்புக்கள் முறையான அங்கீகாரமின்றி நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அங்கீகாரத்துடன் நாட்குறிப்புக்களின் மூலம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 11,143,743 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 4,180,502 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப் பட்ட வருமா னம் | பட்டியலிட ப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமான ம் | திசெம்பர் 31 இல் உள்ளவ றான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமா னம் | பட்டியலிட ப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமான ம | திசெம்பர் 31 இல் உள்ளவ றான மொத்த நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீத வரியும் வரியும் | 2,983 | 3,428 | 3,741 | 4 | 2,995 | 3,112 | 3,107 | 5 |
| வாடகை | 12,508 | 6,291 | 6,183 | 108 | 11,618 | 5,205 | 4,953 | 252 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,258 | 1,007 | 1,026 | - | 1,058 | 1,042 | 1,042 | - |
| ஏனைய வருமானம் | 37,088 | 37,088 | 19,282 | - | 12,435 | 16,494 | 16,494 | - |
| மொத்தம் | 53,837 | 47,814 | 30,232 | 112 | 28,106 | 25,853 | 25,596 | 257 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **வீதவரியும் வரியும்** | | |
| அனைத்து அடிப்படை வசதிகளையும் உள்ளடக்கிய வியாபார நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையானவை சபை அதிகாரப் பிரதேசத்தில் பல ஆண்டுகளாக செயற்பட்டு வருவதுடன் கழிவுப் பொருட்களைச் சேகரித்தல் போன்ற சேவைகள் சபையினால் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பல | மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வீதவரி வலயத்தினை மதிப்பீடு செய்ததன் பின்னர் வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் மூலம் அத்தியவசியமான வசதிகளை வழங்கி வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இடங்களில் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தும் அந்த இடங்களிலிருந்து வீதவரியினை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

**அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| வருடாந்தம் மீளாய்வினை மேற்கொண்டு பெற்றுக்கொண்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்ட நிர்மாண வேலைகள் அனைத்தும் நிர்மாண வேலைகள் தொடர்பான வரிப் பதிவேட்டிற்கு, வியாபார வரி பதிவேட்டிற்கு மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் தொடர்பான பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்படாது கட்டணங்கள் அறவீடு செய்யப்பட்டுள்ள வியாபாரங்களை மாத்திரம் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அறவிடவேண்டிய வியாபாரங்களை இனங்கண்டு அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டிற்கு முறைப்படியாக வியாபாரத்தை மீளாய்வு செய்து ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீளாய்வின் மூலம் இனங்காணப்பட்ட அனைத்து வியாபாரங்களையும் பதிவேட்டில் உள்ளடக்கி வியாபார வரி மற்றும் அனுமதிப்பத்திர கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் 06 தொலைத் தொடர்பு நிறுவனங்களால் 22 ஒலிபரப்பு கோபுரங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 09 கோபுரங்களுக்காக 2022 ஆம் ஆண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 27,000 வரிப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொலைபேசி ஒலிபரப்பு கோபுரங்களுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டதுடன் இந்த ஆண்டின் போது முறைப்படியாக வரிப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புக் கூறவேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணத்திற்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,283,910 பணம் அறவீடு செய்ய வேண்டியிருந்தது. | 17 மிகைக்கட்டணதாரர்கள் உள்ளூராட்சி அமைச்சிற்கு மேன்முறையீடு செய்துள்ளதுடன் அவர்களை விடுவிப்பதற்கு அல்லது மேன்முறையீட்டினை நிராகரிப்பதற்கு ஒரு அறிக்கை வேண்டப்பட்டுள்ளதுடன் அது அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. | முன்னைய ஆண்டிற்கான மிகைக்கட்டன சான்றிதழுக்காக பணம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2017/2018 ஆண்டுகளில் பிரதேசத்தில் காணப்பட்ட தீவிரமான குடிநீர் சிக்கல் மற்றும் சிறுநீரக நோயும் அது சார்ந்த நோயும் பரவும் போக்கு அதிகரித்துச் சென்றதன்க காரணமாக புரனெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 29,962,280 செலவு செய்து 5,000 லீற்றர் அளவுள்ள 60 நீர்த் தாங்கிகளும் 2,000 லீற்றர் அளவுள்ள 60 நீர்த்தாங்கிகளும் சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டு 2017 யூன் 30 ஆந் திகதி பிதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் தெதுரு ஓயா குடிநீர் செயற்திட்டம் மற்றும் ஏனைய நீர் செயற்திட்டங்களின் மூலம் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு குடிநீர் வசதிகள் வழங்குவதன் காரணமாக மேற்கூறிய செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்படாது கைவிடப்பட்டிருந்தது. | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட குடிநீர் சிக்கல் மற்றும் சிறுநீரக நோய் பரவியதன் காரணமாக இந்த நீர் தாங்கிகள் சபைக்கு வழங்கப்பட்டிருந்தும் புரனெகும செயற்த்திட்டத்தின் கீழ் இந்த நீர்த்தாங்கிகளுக்கு நீரைக் கொண்டு வருவதற்கு 02 பவுஸர்கள் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் அதுவரை அந்த நீர் பவுஸர்கள் கிடைத்திருக்கவில்லை. எனவே அந்த செயற்திட்டம் வெற்றியளிக்காத நிலைக்கு மாறியிருந்தது. அதன் பின்னர் அதாவது 2021 ஆம் ஆண்டில் நீர் பவுஸர்கள் கிடைக்கையில் தெதுரு ஓயா நீர் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. | செயற்த்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் ஸ்தாபிக்கப்பட்ட நீர்த்தாங்கிகளை வினைத்திறனாக ஈடுபடுத்துவதற்கான மாற்று நிகழச்சித்திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2021 ஆம் ஆண்டின் மாகாண குறித்தொதுக்கிய மானியத்தின் கீழ் பொல்பிதிகம மஹயாய நீர் செயற்திட்டத்தில் ஆழ் கிணறுகளை நிர்மாணிப்பதற்கும் நீர்த்தாங்கிகளை நிர்மாணிப்பதற்குமாக ரூபா 4,908,057 நிதி ஏற்பாடு கிடைத்திருந்ததுடன் நீர்ப் பம்பிகளை நிர்மாணிப்பதற்கு நிதி ஏற்பாடு வழங்கப்படாமையால் நீர் செயற்திட்டத்திலிருந்து பொறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாது செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டத்தின் நீர்பம்பிகளை நிர்மாணிப்பதற்காக மாகாண நிர் அலகின் மூலம் 2023 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாட்டினை வழங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டின் போது எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | முழுக்கிரண மதிப்பீட்டினையும் தயாரித:து அதற்கிணங்க நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொண்டு செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபைக்கு உரிமையுள்ள பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 02 காணிகள், 04 குடிநீர் செயற்திட்டங்கள், அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 02 கொங்கிரீட் கலக்கும் இயந்திரங்கள், ஒரு மின்பிறப்பாக்கி இயந்திரம் என்பவற்றை உள்ளடக்கிய சொத்துக்கள் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளன. | நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பொல்பிதிகம பிரதேச சபையிடம் 32 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 05 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாது பழுதடைந்த நிலையில் காணப்பட்டதுடன் மிகுதி 27 வாகனங்களில் 12 வாகனங்களுக்கு கணக்காய்வுத் திகதி வரை 2023 ஆம் ஆண்டிற்கான வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான அனுமதிப் பத்திரத்தினைப் பெற்று வாகனங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் வாகனத்தின் பராமரிப்பு சம்பந்தமாகவும் கவனம் செலுத்துதல் வேண்டும். |